இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2020

## பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கான வழிகாட்டல்கள்.

இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழாகவுள்ள ஒவ்வொரு பிரஜையும் வாக்களிக்கும் உரிமை, அரசியல் நடவடிக்கையில் சுதந்திரமாக ஈடுபடுவதற்கும் மற்றும் நேர்மையான சுதந்திரமான தேர்தலுக்கான உரிமை, மற்றும் சர்வதேச மனித உரிமைகள் விழுமியங்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக்கின்றது. இவற்றின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி, தேர்தல் தினம் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியின் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல்களை கவனத்துடன் முன்வைக்கின்றது.

(அ) அரசியல் அமைப்பின் உறுப்புரை 12 இன் படி "சகல ஆட்களும் சட்டத்தின் முன் சமனானவர்கள் மற்றும் சட்டத்தினால் சமனான பாதுகாப்பிற்கும் உரித்துடையவர்களாவர்" இதனடிப்படையில் தேர்தலுக்கு முன்னரான, தேர்தல் தினம் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் இடம்பெறும் தேர்தல் வன்முறை முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதுடன் புலனாய்வு செய்யப்படும். அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காதுவிடல் அல்லது தவிர்த்தல் தொடர்பான அடிப்படை உரிமை மீறலுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொறுப்புடைமையுடையவராவார்.

(ஆ) முறைப்பாடு தொடர்பான புலனாய்வானது பக்கச்சார்பற்ற முறையில் நடாத்தப்படல் வேண்டும். அரசியல் தலையீட்டினால் அல்லது ஏதேனும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களால் நடவடிக்கை எடுக்காமல்விடல் அரசியலமைப்பின் உறுப்புரை 12 இனை மீறியதாகவே கருத்திற்கொள்ளப்படும்.

(இ) சுயமாக வன்முறையைத் தொடக்கல் அல்லது கட்சிகளின் உத்தரவுக்கமைய நபரினை சித்திரவதை கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் இழிவாக நடாத்துதல் அல்லது

தண்டனை உள்ளடங்களாக நபர்கள் அல்லது உடைமைகளிற்கு எதிராக எந்த வகையான மீறல்களிலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பங்கு கொள்ளக்கூடாது.

(ஈ) வெறுப்பை வெளிப்படுத்தல் தொடர்பாக பொலிஸார் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். அதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வழிகாட்டல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(உ) தேர்தல் பிரச்சாரத்துடன் தொடர்புடைய சட்டம் சமமாக பிரயோகிக்கப்படல் வேண்டும். அரசியலமைப்பின் உறுப்புரை 12(2) இல் குறிப்பிடப்பட்டவாறு “எந்த பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம் மற்றும் பிறப்பிடம் அல்லது ஏதேனும் அவ்வாறானதொன்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டலாகாது. இதற்கமைவாக சகல அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் சமமாக நடாத்தப்படல் வேண்டும். குறிப்பாக ஏதேனும் அரசியல் அபிப்பிராயம் தொடர்பில் சமமற்ற நடாத்துகை அல்லது பாரபட்சம் காட்டப்படல் அரசியலமைப்பின் உறுப்புரை 12 இனை மீறியதாக வெளிப்படுத்தப்படும்.

(ஊ) ஒலிபெருக்கி பாவனை மற்றும் தேர்தல் கூட்டங்கள் மேற்கொள்ளவும், பாதயாத்திரை செல்வதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுத்தலும் குறித்த சட்ட விதிமுறைகளுக்கிணங்க மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன்போது எந்தவொரு பிரிவிற்கேனும் கூடுதலான நன்மையோ அல்லது தீமையோ இடம்பெரும் விதத்தில் அந்த அதிகாரத்தை பிரயோகித்தலாகாது. அவ்வாறு செயற்படுவதாயின் தெளிவாகவே அது அரசியலமைப்பின் உறுப்புரை 12 ஐ மீறுவதாகும்.

(எ) துண்டுப்பிரசுரம், சுவரொட்டி மற்றும் வேட்பாளர்களின் புகைப்படம், குறியீடுகள், கொடிகள் மற்றும் பதாதைகளை காட்சிப்படுத்தல் தேர்தல் சட்டத்திற்கு அமைய அனுமதிக்கப்படல் வேண்டும். ஏதேனும் கட்சி அல்லது குழுவிற்கு சிறப்புரிமையடிப்படையில் செயற்பட்டால் அது அரசியமைப்பின் உறுப்புரை 12 இனை மீறியதாகக் கொள்ளப்படும்.

(ஏ) ஏனையோரின் வாக்களிக்கும் உரிமையை மீறும் நபர் தொடர்பான சட்டத்தினை பொலிஸார் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். இது அமுல்படுத்தப்படாவிட்டால் அது அரசியலமைப்பின் உறுப்புரை 12 மற்றும் 14(1) இனை மீறியதாக அமையும்.

(ஐ) பொலிஸார் போதுமான பாதுகாப்பினை வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய ஸ்தானங்களிற்கு வழங்குவதுடன், நாட்டின் சட்டத்திற்கு அமைய நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைமுறையை வழிப்படுத்துவதற்கு சகல முயற்சியும் எடுக்க வேண்டும்.

(ஓ) தேர்தல் சட்டங்களை மீறும் அரசியல் கட்சிகள் அல்லது நபர்களின் தரம் அல்லது அதிகாரங்களுக்கு எதிராக சமமாக சட்டங்கள் நடைமுறைப்படுத்தல் வேண்டும். அரச உடைமைகளை சேதமாக்கல் அல்லது துஷ்பிரயோகம் செய்யும் நபர்களிற்கு எதிராக கண்டிப்பான சட்டங்களை அமுல்படுத்துவது பொலிஸாரின் கடமையாகும். உதாரணம்: அரசாங்க வாகனங்கள், கட்டிடங்கள் மற்றும் வளாகங்கள்.

(ஓ) தேர்தலுக்கு பின்னரான வன்முறைகள் உள்ளடங்களாக தேர்தல் தொடர்பான வன்முறையை தடுப்பதற்கு பொலிஸார் பொறுப்பினை கொண்டுள்ளனர். கடந்தகால அனுபவங்களிற்கு அமைய அரசியல் அதிகாரங்கள் அவ்வாறான வன்முறைகளின் போது பிரயோகிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவு அடிப்படை உரிமை மீறல்களாகும். அடிப்படை உரிமை மிறல்களை தடுப்பதற்கு சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடபடிமுறைகளிற்கு அமைய சகல பொறுப்பான படிமுறைகளையும் பொலிஸார் எடுக்க வேண்டும்.

(ஔ) தேர்தல் காலங்களில் மேற்கொள்ளப்படும் பிரச்சார நடவடிக்கைகளின் போது மற்றும் தேர்தல் வன்முறைகளின் போது தேர்தல் வெற்றியை கொண்டாடும் முகமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பொதுமக்களிடையே பிரச்சனைகள் இடம்பெறாதவன்னம் செயற்படுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

கலாநிதி தீபிகா உடகம

தவிசாளர்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

13 ஜுலை 2020